## அத்தியாயம் 2

# தேவனுடைய சாட்சியை அறிவிப்பது

பவுல் கொரிந்திய சபையின் பிரிவினைகளை நேரடியாகப் பார்த்த பிறகு, அதற்கான காரணங்களை அறிய முற்பட்டார்: சில குறிப்பிட்ட போதகர்களுக்கும், அவர்களது பேசும் விதத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதன் அடிப்படையில் எழுந்த விரோதப் பிரிவுகளே அவை. அப்போஸ்தலரின் சாட்சிகளை மதிப்பிடப், தெருப்பிரசங்க தத்துவ ஞானிகளை மதிப்பிடப் பயன்படுத்தும் அதே அம்சங்களை பிரயோகித்தார்கள். இது சபையில் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த உலகம், ஞானத்தை புரிந்து கொள்வதற்கும், தேவன் ஞானத்தை கணக்கிடு வதற்கும் உள்ள வேறுபாட்டை பவுல் அறிய முற்பட்டார். தேவன், இயேசுவின் மரணத்தின் மூலம், தமது கிருபையின் வல்லமையை வெளிப்படுத்தினார். அதிகாரத்தால் உலகத்தை வசப்படுத்த விரும்பு வர்களுக்கு, அவர்கள் எதிர்பார்க்கும் தேவஞானம், மிகக் குறைவான ஈர்ப்புள்ளதாக இருந்தது.

கொரிந்து கிறிஸ்தவர்கள் பிரிவினைகளால் நோயுற்றி ருந்தற்கான காரணம், அவர்கள் சுவிசேஷத்தை பகுதியாகத்தான் ஏற்றுக் கொண்டார்கள் அவர்களுக்குள்ளிருந்த மாம்சீக அம்சங்கள், தேவனின் ஞானத்தையும், நீதியையும், பரிசுத்தமாக்குதலையும், சிலுவையின் மீட்பையும் காணத் தவறிவிட்டன. இந்த அப்போஸ்தலர், உலக ஞானத்தால் மயங்கியுள்ளவர்களுக்கு, தனது பிரசங்கத்தோடு இணைத்து ஒரு வேண்டுகோளை விடுத்தார். அவர் கிறிஸ்துவின் மாதிரியை அவர்களுக்குள் காட்டியதை, ஆராய்ந்து பார்க்கும்படி அழைப்பு விடுத்தார்.அவர் சுவிசேஷத்தை மட்டும் பிரசங்கிக்கவில்லை, அவர் தன்னையே ஒரு ஒருமைப்பாடு உள்ள மனிதனாகக் காட்டினார். சிலுவையின் முக்கியத்துவத்தை உணரும் ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்ந்தார். அவர் வற்புறுத்தியது, ஒரு புரிந்து கொள்ள முடியாத நியதி அல்ல; அது ஒரு தனிப்பட்ட வாழ்க்கை முறையாக விவரிக்கப்பட்டது. ஒரு தர்க்கத்தில் செல்வது அவரது விருப்பம் அல்ல, அவர்கள் எப்படி மாற வேண்டுமென்று நம்பினாரோ அதை சகோதரர்கள் புரிந்து கொள்ள உதவுவதே அவர் விருப்பம். இந்த அப்போஸ்தலர், தான் கற்பித்த சத்தியத்திற்கு, தன்னையே சரியான உருவமாக முன்னிருத்த தயங்கவில்லை. அவரது வாசகர்கள் தன்னை ஆராய்ந்து பார்க்கும்படி

அழைத்தார்.

## பவுலின் செய்தி பாதுகாக்கப்பட்டது (2:1-5)

**[1]சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவாவது ஞானத்தோடாவாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. [2]இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக் குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன். [3]அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். [4]உங்களுடைய ஞானம் மனுஷனுடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, [5]என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசன முள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருந்தது.**

**வசனம் 1.** பவுல் கொரிந்துவிற்குச் சென்று ஏறக்குறைய மூன்று வருடங்களாயிற்று. தற்கால சுவிசேஷ ஊழியர்களுக்கு, மதக்கோட்பாட்டில் அழுத்தமும், நன் நடத்தையும், ஒரு புதிய சபையில் காண்பிப்பது எப்போதும் கடினமாகவுள்ளது. இதே நிலையை, பவுலும் அவரது காலத்தில் வேறுபாடின்றி கண்டார். அவரில்லாத போது, அவர் கொரிந்துவில் போதித்தவைகளுக்குள், பல விக்கிரக வழிப்பாட்டுக் கொள்கைகள் ஆக்கிரமித்து விட்டன. அந்த அப்போஸ்தலர், வாசகர்கள் மனதில் செய்தியும், செய்தி கொடுப்பவரும், இறுக்கமாகப் பின்னி பிணைந்திருப்பதை புரிந்து கொண்டார். எனவே அவர் தனது கவனத்தை தேவனின் பைத்தியத்திற்கும், மனுஷ ஞானத்திற்குமுள்ள வேறுபாட்டிலிருந்து (1:21-25), தனிப்பட்ட முறையில் தனக்கும், கொரிந்திய சபைக்கும் தான் முதலில் கொடுத்த கட்டளைகளுக்கும் மாற்றினார்.

அவரது பிரசங்கம் கபடம் இல்லாதிருந்தது. அந்த உண்மைக்கு கொரிந்தியர்களே சாட்சியிடுவார்கள். அவர் கடைத்தெருவிலுள்ள பொய் வாதம் செய்பவர்களது முறையைக் கையாளவில்லை. அவர் கற்பிக்கும் விதத்திற்கும், கற்பித்த செய்திக்கும், அறிவு சார்ந்த வரிகளைப் பயன் படுத்தவில்லை. மர்மப் புதிர்கள் அல்லது பேச்சு வன்மையை ரசித்து மகிழ்ச்சியைத் தேடுபவர்கள் வேறு எங்காவது செல்ல வேண்டும். ஒரு நேர்மையான மனிதராக, நேர்மையான அறிவிப்போடு பவுல் வந்தார்.

பவுலின் பொதுவான கருத்து தெளிவாக உள்ளது, ஆனால் விவிலிய ஆய்வுக்கான இரண்டு கருத்துக்களின் தெளிவிற்கு, அவரது கருத்திற்கான சிறு வேறுபாடு உதவும். முதலாவதாக மிக **சிறந்த** (καθ' ὑπεροχὴν, *kath' huperochēn*) என்று மொழி பெயர்க்கப்பட்ட என்ற சொற்கள், **பேச்சுத்** (λόγου, *logou*) திறனை மாற்றுவதை மட்டும்

குறிப்பிடலாம் அல்லது பேச்சுத் திறனையும் **அறிவுப்** (σοφίας, *sophias*) பொருளையும் மாற்றுவது என்றும் புரிந்து கொள்ளலாம். "மிகச்சிறப்பாக" என்ற பதம் ஆர்வத்தை பரப்புவதற்கும் மேலாக மாற்றுகிறது. பேச்சும், அறிவுப் பொருளும் (ஞானமும்) ஒன்றோடொன்று இணைந்தது, ஆனால் அவை கருத்துக்களைத் தொடர்பு படுத்துதலில் இரு வேறு பரிமாணங்களை வலியுறுத்துகின்றன. உரை (பேச்சு) என்பது கருப்பொருளையோ அல்லது அவர் பேசும் விதத்தையோ குறிக்கலாம். ஆனால் அறிவுப்பொருள் (ஞானம்) என்பது கருப்பொருளை மட்டுமே குறிக்கும். பவுல் கொரிந்து சபைக்கு, நயவசனிப்பும், முயன்று தேடின வார்த்தைகளோடும் கொண்ட சிறந்த தத்துவ ஞானிகளைப் போல் வரவில்லை; அதாவது அவர்களது செய்தி வழங்கும் பாணியைப் பின்பற்றவில்லை. அந்தக் காரணத்திற்காக மிகச்சிறப்பாக என்பதை பேசும் திறனோடு மட்டும் தொடர்பு படுத்துவது மேலானது. அந்த அப்போஸ்தலர் தான் ஞானத்தோடு வரவில்லை என்பதை உறுதிப்படுத்தினார், கிரேக்க மக்கள், ஞானம் என்பதைப் புரிந்து கொள்ளும் அந்த ஞானத்தோடு கூட வரவில்லை என்றார். NIV "மேலான" (சிறப்பாக) என்ற சொல்லை "வார்த்தைக்கும்" "ஞானத்திறகும்" தொடர்பு படுத்துகிறது. "நான் உங்களிடத்தில் வந்த பொழுது சிறந்த வசனிப்போடவாவது, சிறந்த ஞானத்தோடவாவது வரவில்லை." இந்நிலையில் NASB மேலான மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது: "நான் உங்களிடத்தில் சிறந்த பேச்சுத் திறமையோடாவது அல்லது ஞானத்தோடாவது வரவில்லை."

இரண்டாவது விவிலிய ஆய்வு வினாவானது, பாடப்பகுதிகளின் வேறுபாட்டை பற்றியது. சில ஆரம்பகால, மிகச்சிறந்ததாகக் கருதப்பட்ட கைப்பிரதிகளில் "தேவஇரகசியம்" (μυστήριον τοῦ θεοῦ, *mustērion tou Theou*) என்ற வார்த்தை உள்ளது (2:1) மேலும் அநேக கைப்பிரதிகளில், "தேவனைப்பற்றிய சாட்சி" (μαρτύριον τοῦ θεοῦ, *marturion tou Theou*) என்றுள்ளது. NRSV "இரகசியம்" என்பதைக் குறிப்பிடுகிறது, ஆனால் அநேக மொழிபெயர்ப்புகளில் "சாட்சி" என்றுள்ளது. இரண்டு சொற்களுமே அடுத்தடுத்த பகுதிகளில் காணப்படுகின்றன ("சாட்சி" 1:6ல்; "இரகசியம்" 2:7ல்). என்பதை தேர்ந்தெடுப்பது கடினமாக உள்ளது. கொரிந்தியர் 2:1 வசனத்தில், பவுல், கிறிஸ்துவை விளக்குவது, அவரது தனித்தன்மையைப் பொறுத்துள்ளது. "சாட்சி" என்று வாசிப்பது மேலான மொழி பெயர்ப்பாக உள்ளது, ஏனெனில் அந்த அப்போஸ்தலர் என்ன நிறைவேற்றினார் என்பதைப் பொருத்தமாகக் குறிப்பிடுகிறது.

**வசனம் 2.** பவுல் கற்பித்தவைகள் எல்லாம் செய்தியின், மைய சத்தியத்திலிருந்து வந்ததும், அதோடு இணைந்ததுமாயிருந்தது: **இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரை யேயன்றி**. அந்த

அப்போஸ்தலர், செய்தியில் ஆழ்ந்திருப்பதை மிகக் கவனமாக தேர்ந்தெடுத்தார், ஏனெனில் உலகஞானம் இகழத்தக்கது என்று அவருக்குத் தெரிந்திருந்தது. அவரது நோக்கம், தன்னைப் பின்பற்றும் கூட்டத்தை சேர்க்கவோ அல்லது தனது நற்பெயரை மேம்படுத்தவோ அல்ல. கொரிந்து வழியாக செல்லும் பிரயாண உபதேசியாளர்கள் பயன்படுத்தும் தந்திரங்களை, இவரும் கடைபிடித்திருந்தால், அநேக சீஷர்களை பெற்றிருக்கலாம், ஆனால் சுவிசேஷமில்லாத ஒன்றை அவர் ஏற்கவில்லை. தேவன் அவருக்கு வெளிப்படுத்தின பிரகாரமே அவர் பேச முற்பட்டார். புகழோ, பொருளாசையோ அவரைப் பேசத் தூண்டவில்லை. கொரிந்தியர்களை அவருக்காக சாட்சியளிக்க அழைக்கிறார். ஒருமைப்பாட்டை எவ்விதத்திலும் விட்டுக்கொடுக்காமல், தேவன் அருளியதை வெளிப்படுத்தினார், அந்த செய்தி, அவர்களுக்கு பரிசுத்தமாக்குதலை உண்டாக்குகிறது.

அந்த அப்போஸ்தலரின் வார்த்தைகளின் அம்சம் என்னவென்றால், கொரிந்தியர்கள் தன்னுடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்பதே. சுய மகிமைக்காக முயற்சிப்பதை கைவிட வேண்டுமென்றிருந்தனர். அவர்கள், அவரைப்போலவே ஒருமைப்பாட்டின் மக்களாக சத்தியத்தையே பேசினார்கள், வேறு எந்த காரணத்திற்காகவும் அல்ல, சத்தியமாகவே அது இருப்பதால் தான். கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது, அதிகாரங்களையும், உலகம் தரும் ஞானத்தையும் வெறுத்து விடுவதே என்று கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவர்களது மகிமைக்காகவே அந்த இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட வேண்டியிருந்தது. அவர்களை வெட்கப்படுத்தும் உலக ஞானத்தை ஏற்றுக்கொள்வது, தேவ ஞானத்தை வெறுப்பதைப் போன்றது. கிறிஸ்துவின் சிலுவையைச் சுற்றி, சபையானது இணைந்திருந்தால், அவர்களை சிரமப்படுத்தும், அற்பகாரியங்களுக்கான பிரிவினைகள் நின்று விடும்.

**வசனம் 3.** பவுல் கூறிய, ஞானத்தைப் பற்றியும் மதியீனத்தைப் பற்றியவை எல்லாம், சபையில் காணப்பட்ட பிரிவினைகளைப் பற்றியதே. அந்த அப்போஸ்தலர் ஞானத்தைக் குறித்து, தெளிவற்ற விதி முறைகளைத் தரவில்லை. தயக்கமின்றி, கொரிந்தியர்கள் எதிர்பார்த்த, எளிமையான தத்துவ ஞானிகளுக்கும், சொல் வன்மையுள்ள பேச்சாளர்களுக்கும் மாறாக தன்னை வேறுபடுத்தி காட்டினார். அவர்களைப் போலன்றி, தன்னை பயந்தவளாகவும், பலவீனனாகவும் காட்ட விரும்பினார். அவர், **பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும்** அவர்களோடிருந்ததை அவர்கள் நினைவில் வைத்திருந்தார்கள். கலாத்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு எழுதினார். "... உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன் அப்படியிருந்தும், என் சரீரத்தில் உண்டாயிருக்கிற

சோதனையை அசட்டை பண்ணாமலும் ...” (கலா. 4:13, 14). சுவிசேஷத்தைப் பிரசங்கித்த இந்த மனிதர், பலவானோ, நயவசனிப்புள்ள பேச்சாளரோ, புகழப்பட்ட ஆசிரியரோ, வெற்றிகரமான வணிகரோ அல்ல. இது சிலுவையின் தன்மையிலிருப்பதால், சுவிசேஷத்தை நளினமாகவோ புத்தி சாலித்தனமாகவோ பிரசங்கிக்க இயலாது, பலவீனத்தில் தான் பிரசங்கிக்கப்படும்.[1]

அவரது வார்த்தைகளை உறுதிப்படுத்த, தான் முதலாவது கொரிந்துக்கு வந்ததை நினைப்பூட்டுகிறார் (அப். 18ல் நிகழ்வுகள் தொகுக்கப்பட்டுள்ளன) ஏதென்ஸில் அவரது ஊழியம் பயனற்றுப் போயிற்று என்று தோன்றின போதும் அடுத்து உடனே கொரிந்துவிற்கு பிரயாணம் செய்தார். தீமோத்தேயுவும் சீலாவும் மக்கதோனியாவில், சபைகளை சேர்த்துக் கொண்டிருந்தார்கள். பவுல் தனியாக கொரிந்துக்கு வந்து சேர்ந்தார். தான், எந்த ஞானத்திற்குரிய ஆதாரங்களோடோ, பேச்சுவன்மையோ வாய்ந்த ஒரு மனிதனாக தான் வரவில்லை என்பதை, கொரிந்துவிலுள்ள ஆதி கிறிஸ்தவர்களுக்கு நினைப்பூட்டுவதன் மூலம் அவர்கள் அதற்கு சாட்சியாயிருப்பார்கள். பவுலை பொறுத்தவரை, கிறிஸ்துவுக்குள்ளிருப்பதும் அவரை பிரஸ்தாபப்படுத்துவதும், உலகம் குறிப்பிடுவது போல சுய மரியாதையையும் அதிகாரத்தையும் இழப்பதுதான்.

**வசனங்கள் 4, 5.** அந்த அப்போஸ்தலர், கொரிந்தியர்களுக்கு செய்தியையும் பிரசங்கித்தலையும் உணர்த்தும் பொழுது அவற்றிற்குள்ள சரியான வித்தியாசத்தைக் காண முற்பட்டார். பவுல் மற்ற பேச்சாளர்கள், எழுத்தாளர்கள்ப் போல, அவரது வார்த்தைகள், வார்த்தை ஜாலம், மிக வர்ணித்தல் போன்ற இலக்கிய அளவு கோலால் கணக்கிடும் போது, மதிப்புக்குறைவாக உள்ளதாக உணர்ந்தார். செய்தியும், பிரசங்கமும் ஒன்றாக இணைந்திருக்கும் போதுதான், பவுல் கொடுக்க விரும்பும் கருத்து முழுமையாக தெரிவிக்கப்படுகிறது. கொரிந்திய பட்டணத்து வழியாக கடந்து செல்லும் வஞ்சக தத்துவ ஞானிகளின் நயவசனிப்புக்கு பழக்கப்பட்ட கொரிந்தியர்களுக்கு, அவர் அறிவு சார்ந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகளாலோ, நய வசனிப்பாலோ தனது கருத்தை சமர்ப்பிக்கவில்லை. மாறாக, அவரது பிரசங்கம் **ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.**

“நடப்பிக்கப்பட்டவைகள்” என்பது, அவர் தனது வாசகர்கள், தான் நடப்பித்த அற்புதங்களைக் கண்டதை, ஐயமின்றி, மறைமுகமாக தெரிவிக்கிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 18ல், கொரிந்துவில், பவுலால் எந்த அற்புதமும் நடப்பித்ததாகப் பதிவு இல்லை, ஆனால், பிறகு எவர் பட்டணத்திலுள்ள சபைக்கு எழுதும் பொழுது இவ்வாறு குறிப்பிடுகிறார், “அப்போஸ் தலருக்குள்ள அடையாளங்கள், எல்லா விதமான பொறுமை யோடும், அதிசயங்களோடும், அற்புதங்க ளோடும்

நடப்பிக்க பட்டதே" (2 கொரி. 12:12; காண்க கலா. 3:5). பவுலின் நயவசனிப்பு விதிகளற்ற அவருடைய ஆவிக்குரிய சாட்சி, அவர் கொரிந்தியர் களுக்கு கற்பித்த சத்தியத்தை உறுதிப்படுத்தியது.

அந்த அப்போஸ்தலர், தான் பிரஸ்தாபப்படுத்திய செய்தியிலிருந்து விலகியிருக்கமாட்டார். கொரிந்துவில் அவர் பிரசங்கித்ததில், அவரும், அவரது குணங்களும், அவரது மதிப்பும், தேவனோடு அவர் கொண்டுள்ள உறவும், கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையும், பிரசங்கத்தின் பகுதிகளாக (அம்சங்களாக) இருந்தன. கிறிஸ்துவின் சரீரத்தோடு ஒன்றாக தான் இருப்பதையே, பாதுகாப்பாகத் தான் இருப்பதாக உளறுகிறார். கொரிந்து சபையில், கட்சித்தீவிரம் கொண்டு வந்த பிரிவினைகளைப் பற்றியே, பவுல் அக்கரை கொண்டார். பிரிவினைகளுக்கானக் காரணங்களை ஆராய்ந்து பார்த்த பொழுது, அவர், ஞானத்தையும் சிலுவை மீதுள்ள பைத்தியத்தையும், கருத்தில் கொள்ளும்படி வாசகர்களை வற்புறுத்தினார். "மெய் ஞானம்" என்பதன் அர்த்தத்திற்கு வெறும் வார்த்தைகளால் விவரிக்க முற்படவில்லை. சபையின் சமாதானம், தேவஜனங்களின் ஒற்றுமை, ஆகியவை எழுதுவதற்கு அவரைத் தூண்டியது. மெய்யான ஞானம் என்பது விசுவாசிகளுக்குள்ளே ஒருமைப்பாடும், நல்லெண்ணமும், ஞானத்தோடு இசைந்தது.

இந்த அப்போஸ்தலர் தனது எண்ணத்தை தனது பிரசங்கத்திலிருந்தும், மாதிரியிலிருந்தும் மாற்றி கொரிந்தியரின் விசுவாசத்தின் மீது செலுத்தினார் அவர் அவர்களுக்குக் கற்பித்தும், கற்பித்த விதமாக நடந்ததால், அவர்களது விசுவாசம், இரட்சிப்பையளிக்கும். அந்த அப்போஸ்தலரின் விசுவாசம் மனித ஞானத்தின் மீதல்ல, தேவ வல்லமையின் மேலிருந்தது, கொரிந்திய விசுவாசிகளின் விசுவாசத்தின் மீதும் அல்ல; பரிசுத்த ஆவியானவரே, பதிலுக்கு ஞானத்தை வெளிப்படுத்தினார் (2:10), அந்த ஆவியானவரே கொரிந்தியருக்கு அவரது வழியில் ஞானத்தை வெளிப்படுத்துவார். ஒன்றாக இணைந்து அவர்கள் சிலுவையின் மீட்பை பகிர்ந்து கொள்வார்கள். பவுல், ஞானத்திற்கு மனிதன் காட்டும் கபடத்தை வெறுத்தார், அவர்களும் அவ்வாறிருக்க விரும்பினார். அவர்கள் அவ்வாறு செய்தால், பிரிவினைகளும் கட்சி விசுவாசமும் அழிந்து போகும்.

இதற்கிடையில் அந்த அப்போஸ்தலர் தனது தனிப்பட்ட சுமையை (பொறுப்பை) உணர்ந்தார். கொரிந்திய சபைக்கு, சுவிசேஷத்தின் உண்மைத்தன்மையும், வல்லமையும், அதிகமாக செய்தியளிப்பவரின் நல் ஒழுக்கத்திற்கே தொடர்புடையதாகப் பார்க்கப்பட்டது. சுவிசேஷத்தால் பிரசங்கிப்பவர், தான் பிரசங்கிக்கும் கருத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்த அளவின் படியே எப்பொழுதும் மதிப்பிடப்படுகிறார். தற்கால உலகத்தைப் பற்றியோ அல்லது

பழங்காலத்தைப் பற்றிய கருத்துக்களாயிருந்தாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பவர்களுக்கு ஒரு பெரிய பொறுப்புள்ளது.

## தேவ இரகசியம் மறைக்கப்பட்டதும் வெளிப்படுத்தப்பட்டதும் (2:6-13)

கொரிந்து சபையில், ஞானத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதால், கட்சிகள் உருவாயின. பவுல் ஞானத்தைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. தேவஞானம் (1:21) சுவிசேஷத்தை இணைத்துப் பிடிக்கிறது. "கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதே" "தேவஞானம்" (1:23, 24). கொரிந்தியர்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற்றதே, தேவஞானத்திற்கு (1:30), சாட்சியாக இருந்தது, ஆனால் "இப்பிரபஞ்சத்தின் பிரபுக்கள்" (2:6) தேவ ஞானத்தை போலித்தனமாக, கட்டுக்கதையாக மாற்றினார்கள். பவுல் கபடத்தை வெறுத்தார். கிறிஸ்துவையும், கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதேயேயன்றி (2:2) அவர்களுக்குள் வேறோன்றையும் அறிய வேண்டாமெனத் தீர்மானித்ததே, தேவஞானம் என அந்த அப்போஸ்தலர் தெரிந்தெடுத்தார். பவுல், கொரிந்தியர்களிடம் ஒற்றுமையை வலியுறுத்தும் தனது பணியில், சிறிது ஓய்ந்து, அவர் பின்பற்றும் தேவஞானத்தை சுருக்கமாகப் பிரசங்கித்து, அவர்களும் அந்த ஞானத்தை பின்பற்ற வேண்டுமென்று விரும்பினார் - அந்த ஞானம், அவர்களை சிரமப் படுத்தும், சிறிய பிரிவினைகளை கொன்று விடும்.

### ஞானத்தைப்பற்றியதெளிவான வேறுபாடு (2:6-9)

**6அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல,**
**7உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப் பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். 8அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே.**
**9எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.**

**வசனம் 6.** அந்த அப்போஸ்தலர், கொரிந்துவில் சிலர் ஞானத்தை வரையறை செல்வதற்குமுள்ளதை வேறுபடுத்திக்காட்ட விலகுகிறார். பவுல் கற்பிக்கும் ஞானம், **இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய** புரிந்து கொண்ட ஞானத்தின் வகையல்ல. இது மேலான வகையைச் சார்ந்த

ஞானம். தேறினவர்கள் ஏற்கெனவே புரிந்து கொண்ட, சுவிசேஷத்தில் அழிந்துள்ள ஞானம். கொரிந் திய வாசகர்கள் தேறினவர்களாகவே, அந்த அப்போஸ்தலர் எழுதிக் கொண்டிருந்தார். விரோதத்தை அவர்களை விட்டுத் தள்ளுவதால்தான், ஞானமும் தேர்ச்சியும் பெறமுடியும். ஒரு கிறிஸ்தவன், நான் பவுலைச் சேர்ந்தனென்றும், மற்றொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் கூறுகின்ற நிலையானது, உணர்வுள்ள முதிர்ந்தவர்களை விட அதிக குழந்தைத் தன்மை யுள்ளவர்களாக்குகிறது (3:1).

பவுல், கொரிந்தியர்களுக்கு இரண்டு விதமான ஞானத்தை முன் வைக்கிறார். முதலாவது தேவனிடத்திலிருந்து வரும் ஞானம்; மற்றொன்று இந்த பிரபஞ்சத்தாலும், பிரபஞ்சத்தின் பிரபுக்களாலும் பின் பற்றப்படும் ஞானம். விமர்சனையாளர்கள், “இப்பிர பஞ்சத்தின் பிரபுக்கள்” என்று பவுல் கூறுவதைக் குறித்து குழம்பினார்கள். மனிதக்கண்களுக்குத் தெரியாத பிசாசுகளின் வல்லமையான கிரியைகள் இந்த அண்டத்திலிருப்பதாக நம்பினர். கொலோசேயர் 1:16ல் “காணப்படுகிறவைகளும், காணப்படாத வைகளுமாகிய வஸ்துக்களும்” தேவனால் சிருஷ்டிக்கப்பட்டன என்று குறிப்பிடுகிறார். “சிங்காசனங்கள்” “ஆட்சி எல்லைகள்” “துரைத்தனங்கள்” மேலும் “அதிகாரங்கள்” இதில் அடங்கும் (காண்க ரோமர் 8:38; கொலோ. 2:15; ESV). கொரிந்துவில் அவர்களது ஞானத்தால் ஏற்பட்ட பிரிவினைகள், “இந்த பிரபஞ்சத்தின் தேவனால்” உந்தப்பட்டவை (2 கொரி. 4:4). இதற்கு விளக்கமளிக்கும் பொழுது ஏற்படும் பிரச்சனை என்னவென்றால், இந்தப்பாடப் பகுதிக்கு முற்றிலும் வித்தியாசமான ஒரு கருத்தை முன்னுரையாக அளிக்க வேண்டியுள்ளது. “இந்தப்பிரபஞ்சத்தின் பிரபுக்கள்” என்ற வார்த்தை மறுபடியும், வசனம் 8ல், கர்த்தரை சிலுவையிலறைந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பிரபஞ்சத்தின் பிரபுக்களான, அதிகாரிகளின் குருட்டுத்தன்மையும், மன்னிக்க முடியாத மதியீனத்தையும், பவுல் தேவ ஞானத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறார் என்று ரிச்சர்ட் E. ஆஸ்டர், Jr. சரியாகக் குறிப்பிடுகிறார்.[2]

பவுல் தனது எல்லா நிருபங்களையும் எதிர்பார்ப்போடு எழுதுகிறார். முடிவு வருகிறது. கர்த்தர் திரும்ப வருவார். இந்தப்பிரபஞ்சத்தின் பிரபுக்கள் கொஞ்ச காலம் அதிகாரம் செலுத்துவார்கள், ஆனால் **அழிந்து போகிறார்கள்**. கர்த்தர் வரும்பொழுது இந்த யுகம் அதிகாரங்களோடும் துரைத் தனங்களோடும் அழிந்து போகும், என்று பவுல் தனது வாசகர்களியம் கூறவில்லை. அது உண்மையாக இருந்திருக்கலாம், ஆனால், மிக விரைவில் நடைபெறப் போவதை அவர்களுக்கு உறுதிப்படுத்தினார். கர்த்தரின் வருகை விரைவிலிருக்கலாம், அல்லது அது தாமதிக்கலாம்; ஆனால் எப்படியும் இந்த யுகம் “அழிந்து போகும்.” அந்த செயல்பாடு பவுலின்

காலத்திலேயே ஆரம்பமாயிற்று. முடிவு இன்னும் வரவில்லை. ஆனால் காணக்கூடியவர்களுக்கு, துரைத்தனங்களின் வீழ்ச்சியின் ஒரு சிறு காட்சி, முடிவைத் தெளிவாகக் காணமுடிகிறது. “உங்களைச் சுற்றிப் பாருங்கள்” என்று பவுல் துரிதப்படுத்துகிறார்; “ஞானமுள்ளவன் இந்த பிரபஞ்சம், ஏற்கெனவே முடிவிற்கு வந்து கொண்டிருக்கிறது என்பதைக் காண்பான்” யோவான், “ஒழிந்து போகிறது” என்ற சொல்லிற்கு, வேறு கிரேக்க பதத்தைப் பயன்படுத்துகிறார், ஆனால் அவரது கருத்து ஒரே மாதிரி இருந்தது, “இருள் நீங்கிப் போகிறது,” “மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது” என்றார் (1 யோவான் 2:8). பிறகு, “உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்” (1 யோவான் 2:17).

**வசனம் 7.** பவுல் பிரஸ்தாபப்படுத்தின ஞானம், அவராலேயே உருவாக்கப்பட்ட ஏதோ இரகியமல்ல. மாறாக, தேவன், முன்பு **மறைக்கப்பட்ட இரகசியத்தை**, அவருக்கு வெளிப்படுத்தினார். சிலுவையின் வாயிலாக, புரியாத ஒரு நிலை தெளிவாயிற்று. அந்த இரகசியம் என்னவென்றால், ஒரே பரலோக தேவன், எல்லா ஜனங்களுக்கும் இயேசுவின் மூலமாக ஜீவனுக்குரிய வாசலைத் திறந்தார் (1:30). எகிப்திலிருந்து வழி நடத்தப்பட்ட, தேவனின் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களே அவரைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள். முற்காலத்தில், இந்த சிலுவையைப் பற்றிய இரகசியம், அல்லது மறைத்து வைக்கப்பட்ட ஞானம், உணரப்படும் வகையில் வைக்கப்படவில்லை; ஆனால் இப்பொழுது, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. இந்த கருத்து ரோமர் 16:25ல் தெளிவாக உள்ளது. “ஆதிகால முதல் அடக்கமாய் வைக்கப்பட்ட இந்த இரகசியம்” இரகசியத்தின் கருத்திற்கு, பவுல் திரும்ப மற்ற இடங்களிலும் குறிப்பிட வந்தார். கிறிஸ்துவின் மூலமாக தேவன் அருளிய வெளிப்பாடானது, மேசியா, யூதருக்கு மட்டும் இரட்ச கரல்ல, தேவ இராஜ்ஜியத்தில் புறுஜாதியாரும் உடன் பங்காளிகளாயிருக்கிறார்கள் (எபே. 3:4-6).

அந்த அப்போஸ்தலர் “இரகசியம்” (*mustērion*) என்ற வார்த் தையை மிக கவனமாக தேர்வு செய்துள்ளார், அது, கிரேக்க மொழியைப் பேசும் அக்காலத்து மக்களிடையே ஒரு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த பதமாக இருந்தது. கிரேக்க மதத்தில், தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் உள்ள புனித சின்னங்களுக்கு இரகசிய (அந்தரங்க) சடங்குகள் செய்வது பழங்கால முறையாக இருந்தது. கிரேக்கர்கள், ஆரம்ப சடங்குகளை “இரகசியங்கள்” என்றார்கள். தானிய தேவதையான Demeterஐ, வணங்குவதில், அதோடு இணைந்த இரகசியங்கள் நன்கு அறிந்ததே. அதே போல் Dionysus என்ற ஒயின் கடவுளுக்கான சடங்குகளும் அவ் வாறேதான் கிழுக்கு தேசங்களிலிருந்தும் மற்ற இரகசியங்களை கிரேக்க மொழி பேசும் மக்களிடம் ஊடுருவின. உதாரணமாக, ஆசியாமைனரிலிருந்து

Cybeleக்கானவையும், எகிப்திலிருந்து Isisக் கானவையும் உட்புகுந்தன. பவுல் "இரகசியம்" என்ற வார்த்தையை மறுவரையறை செய்தார்.

கிறிஸ்துவைப் பற்றி செய்தி, இந்த உலகத்திற்கு திடீரென வந்த ஒன்றல்ல என்பதைக் கூற, பவுல் மிக கவனமாக இருந்தார். பாடனுபவித்த கிறிஸ்துவால், புற ஜாதிகளையும் யூதர்களையும் இரட்சிக்க, தேவனின் திட்டமானது பலகால இடைவெளிகளுக்கும் முந்தியது. அதாவது கிறிஸ்து பாடுபட வேண்டுமென்பதில், தேவனுக்கு எந்த பின் யோசனையும் இருக்கவில்லை (காண்க லூக். 24:26; அப். 17:3). அவர் இயேசுவின் பணியை, நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளிடத்திலும் பேசியுள்ளார் (லூக். 24:44). அவ்வகையில் அவரது திட்டம் **முன்** குறிக்கப்பட்டது. மனுக்குலத்தை மீட்பதற்கான, தேவ வழி நடத்துதலை வேதாகமத்தில் முன்குறிக்கப்படுதல் என்று குறிப்பிடப்படுகிறது. பிறப்பிற்கு முன்பே, சிலரை இரட்சிப்பதற்கும், சிலரை ஆக்கினைக்குட்படுத்தவும் தேவன் முன் குறிக்கவில்லை. தனி மனிதனின் இரட்சிப்பிற்கு, சுவிசேஷத்தைக் கேட்பது அவசியம். அதற்குப்பிறகு, கேட்டவர்கள் தீர்மானம் எடுக்க அழைக்கப் பட்டார்கள் (ரோமர் 10:14). கிறிஸ்துவுக்கு முன்பு, இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு யூத ஞானி, இவ்வாறு நன்கு குறிப்பிடுகிறார்.

> ஆதியில் தேவன் மனிதனை சிருஷ்டித்த போது, அவனை, சுய தீர்மானத்தை எடுக்க அனுமதித்தார்.
> நீ தீர்மானித்தால், கட்டளைகளை நிறைவேற்றலாம் இதுவே அவரது சித்தத்திற்கு உண்மையாயிருத்தல்.
> உனக்கு முன்பாக அக்கினியும் தண்ணீரும் வைக்கப்பட்டுள்ளது. நீ எதைத் தேர்ந்தெடுக்கிறாயோ அதற்கு உன் கையை நீட்டு.
> மனிதனுக்கு முன்பாக ஜீவனும் மரணமும் உள்ளது எதைத் தேர்ந்தெடுக்கிறானோ அது அவனுக்குக் கொடுக்கப்படும்.[3]

**வசனம் 8.** பவுலின் சிலுவையைப் பற்றிய பிரசங்கத்தில் காட்டப்பட்ட ஞானமானது அக்காலத்தில் வாழ்ந்த தெரு தத்துவ ஞானிகளின் ஞானத்திலிருந்து வேறு வகையாயிருந்தது. கடைத்தெருவில் நடமாடும் பேச்சாளர்களை, சிலர் வெறுத்தார்கள், சிலர் ரசித்தார்கள், **இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களோடு** சேர்ந்து, **மகிமையின் கர்த்தரை சிலுவையில**றைந்ததால் தேவ ஞானத்தைப் பற்றிய அவர்களது அறியாமையை வெளிப்படுத்தினார்கள். கொரிந்து கிறிஸ்தவர்கள், சிலுவைக்கொடியினடியில், ஒன்றாக இணைந்து ஒரே தளமாக நிற்பது அவசியமாயிற்று. உலகத்தின் பெரிய மனிதர்கள், தங்களுக்கு எல்லா அதிகாரமிருந்தும், பவுலின் வாசகர்களை விட தேவ ஞானத்தை அறிந்திருக்கவில்லை. அவர்களது தேவனைப்பற்றிய அறியாமை நேர் எதிரான செயலில் முடிந்தது. இயேசுவை வெறுத்தவர்களும், அவருக்கு பயந்தவர்களும், தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, அவரை சிலுவையிலறைந்தார்கள். நம்முடைய

மகிமைக்காக (2:7), "மகிமையின் கர்த்தர்," பரத்திலிருந்து வந்த ஞானத்தின் மூலம் சிலுவையின் இரகசியத்தை விளங்கப்பண்ணினார்.

இந்த ஓரிடத்தில் தான் இயேசுவைக் குறிக்க, பவுல் மகிமையின் கர்த்தர் என்ற பதத்தைப் பயன் படுத்துகிறார். அவர் விளக்குவது, தெளிவாகக் (கண்கூடாகக்) காணப்படுவதைவிடக் குறைவுதான். அந்தப்பதத்தின், மூலச் சொல் ஒரு பெயரடையாக இருக்கலாம் (τῆς δόξης, *tēs doxēs*) அதாவது, "மகிமையுள்ள கர்த்தர்." NASB இதே பதத்தை யாக்கோபு 2:1ல், "நமது மகிமையுள்ள கர்த்தர் இயேசு கிறிஸ்து என்று மொழி பெயர்க்கிறது." ஏதேனும் ஒன்றாக, பவுல், தேவனின் மேலான பரிசுத்தமான வழிகளை தொகுத்து வழங்க அந்த மகிமை என்ற பதத்தோடு இணைத்திருக்கலாம். இயேசுவே, எல்லாவற்றிற்கும் மேலான வெளிப்படுத்தலாக இருக்கிறார். மூன்றாவதாக, பரலோக ஆளுகையில் தேவன், இயேசுவை அவரது வலது பாரிசத்தில் உட்கார வைத்ததன் மூலம் தேவன் இயேசுவுக்கு அளித்த மகிமையை, பவுல் தன் மனதிலிருத்தியிருக்கலாம்.

**வசனம் 9.** மேற்கோள் காட்ட எடுத்துக் கொண்ட பகுதி தெளிவற்றதாயுள்ளது, இது ஏசாயா 64:4 (64:3; LXX) லிருந்து எடுத்திருக்கலாம், இருந்தாலும் ஏசாயாவும், பவுலும் அளிக்கும் அம்சங்கள் மிகவும் வேறு படுகின்றன. பவுல் பொதுவாக, பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டும்போது, **எழுதியிருக்கிறபடி** என்பதில் முடிப்பார் (ரோமர். 15:3, 9ல் இருப்பதைப்போல), ஆனால் இங்கு வேதாகமத்திற்கு வெளியே உள்ள கருத்தை மறைமுகமாகத் தெரிவிக்கிறார். ஏனெனில், அது அவரது பழக்கமல்ல, ஏற்புடையதுமல்ல, சுவிசேஷ விளக்கப்பட்டியலில் குறிப்பிடாத, கிறிஸ்துவைப் பற்றிய ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார், அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அப்போஸ்தலர் 20:35ல், கர்த்தர் கூறாத ஒன்றை, குறிப்பிட்டுக் காட்டுகிறார். அவர் எழுதப்பட்ட ஒரு கரத்தை மேற்கோள் காட்டுவதால், பழைய ஏற்பாட்டின் கருத்தை, பொழிப்புரையாக அளித்திருக்கக் கூடும்.

ஏசாயா எழுதினார், "உமக்குக் காத்திருப்பவர்களுக்கு, நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல், அவைகளைக் கண்டதில்லை" (ஏசாயா 64:4) இந்த வசனத்திற்கான பவுலின் சிறந்த விளக்கமானது, அவரது சரியில்லாத மேற்கோளாக, உள்ளது. காரணம் அவர் கிறிஸ்துவால் உந்தப்பட்டு, அதிகாரமுள்ள ஒரு அப்போஸ்தலனாக இருப்பதே. அவ்வாறே, தனது விளக்கத்தை விரிவாக்குவதன் மூலம் ஏசாயாவில் உள்ள கருத்துக்களை, அந்த தீர்க்கதரிசியின் கருத்துக்களிலிருந்து ஒரு புதிய கருத்தை எடுக்கிறார். ஆவியானவர் மூலமாக, தேவன் வெளிப்படுத்தினதின் அடிப்படையில் (1 கொரி. 2:10), அவர் ஏசாயாவின் 64:4 மற்றும் 65:16 வார்த்தைகளில் தனது கருத்திற்கு பொருத்தமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, தனது

கண்ணோட்டத்தில் அவற்றை விரிவாக்கினார். ஏசாயா கற்பித்த அதே கருத்தை, கொரிந்திய வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று, அந்த அப்போஸ்தலர் வலியுறுத்தவில்லை. மாறாக, வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத தேவ ஞானத்தையும், வல்லமை யையும் - அந்த **கண்ணால் காணாத**, **செவியால் கேட்காத** - என்பவரை ஏசாயாவில் வார்த்தைகளைப் பவுல் கண்டுபிடித்து - அதை கொரிந்துவின் சூழ் நிலைக்கு தொடர்பு படுத்தினார்.

ஏசாயாவிலுள்ள வார்த்தைகள் இரண்டு உண்மைகளைத் தெரிவிக்க உதவின. முதலாவது, கிறிஸ்துவையும், அவரை சிலுவையிலறைந்த செய்தியிலுமுள்ள, தேவன் காட்டிய ஞானம், தேவ ஜனங்களுக்கு, மனிதக்கற்பனைக்கெட்டாத ஒரு ஆசீர் வாதத்தை தந்தது என்பதை உறுதிப்படுத்தினார். இரண்டாவது, அவரை நேசிப்பவர்களுக்கு, **அவரால் ஆயத்தம் பண்ணப்பட்ட** இன்னும் அநேக ஆசீர்வாதங்கள் தொடர்ந்து வரும் என்பது.

அக்காலத்தில் வாழ்ந்தவர்களைப்போல, பவுல் உருவகித்து, மனித தர்க்க அறிவிற்கு **இருதயமே** மையம் என்று பேசினார் அவரும் அவர் காலத்தில் வாழ்ந்தவர்களும், மனவெழுச்சியின் அடித்தளம் குடல் என்றும் சிலர் சிறுநீரகம் என்றும் நினைத்தார்கள். உதாரணமாக, பவுல் ஒநேசிமை, வீட்டிற்குத் திரும்ப அனுப்பும் பொழுது, பிலோமோனிடம் கூறுகையில், “என் உள்ளம் போலிருக்கிற” என்று ஒநேசிமை குறிப்பிடுகிறார் (பிலே. 12). சொல்லர்த்தமாக, பவுல் தனது அடிமை “தனது குடலே” என்கிறார். “இருதயம்” உள்ளார்ந்த ஜீவிய மனைத்திற்கும் பொறுப்பாக உள்ளது, எண்ணங்களும் மனவெழுச்சிகளும் அதில் அடங்கும், சில சமயம் அது ஒன்றின் மீதோ அல்லது மற்றொன்றின் மீதோ சாய்கிறது.[4]

## தேவனின் ஆவி (2:10-13)

**10நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். 11மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக் குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். 12நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். 13அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவை களோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.**

**வசனம் 10.** இந்தப் பிரபஞ்சத்தின் பிரபுக்கள் மிக சாதுரியமாகக் கையாளும் ஞானத்தைவிட, கிறிஸ்தவர்கள் பின்பற்றியது ஒப்பிடமுடியாத தேர்ந்த ஞானம் என்று தனது வாசகர்களுக்குத் தெரிவிக்க, அந்த அப்போஸ்தலர் ஏசாயாவிலிருந்து பதங்களை எடுத்துள்ளார். அதன் மேன்மை என்பது, **ஆவியினாலே வெளிப்படுத்தினார்** என்பதிலிருந்து வருகிறது. பவுல், ஆவியைப்பற்றி சிந்திக்க, வாசகர்களை அழைக்கும் போது எங்களுக்கு என்ற தன்மை பன்மையைப் பயன்படுத்துகிறார். 1 கொரி. 2:12, 13ல் "நாங்கள்" "எங்களுக்கு" என்று மேலும் நான்கு முறை எழுதுகிறார். அவர் தன்னோடு யாரை சேர்த்துக் கொள்கிறார்? ஒன்று அப்போஸ்தல அதிகாரத்தை உறுதி படுத்துவதாக இருக்கலாம். பவுலுக்கும், மற்ற அப்போஸ்தலருக்கும் தேவனிடத்திலிருந்து வெளிப்பாடு கிடைத்தது, அது உலக ஞானத்தை விஞ்சியது. மேலும் அப்போஸ்தல அதிகாரத்தை உணர்வது, சபைக்கு இடறல் உண்டாக்கிய பிரிவினைகளை, களைவதற்கு உதவியது. எனினும் அவர் மற்ற எந்த அப்போஸ்தலரையும் தனது அடுத்துள்ள பகுதிகளில் குறிப்பிடவில்லை. வாசகர்களிடம் நல்லிணக்கத்தை பெற, பவுல் பயன்படுத்திய நாங்கள் என்பது, அவரது பண்பட்ட தன்மையை அதிகம் புரிந்து கொள்ளப்பட்டது. ஆவியானவரின் நேரடி வெளிப்படுத்துதலால், அவர் **எல்லாவற்றையும்** தேடமுடிந்தது, **தேவனின் ஆழத்தையும்** கூட கொரிந்திய சகோதரர்கள், பவுலின் வார்த்தைகளை, அவர்கள் வாசித்த வண்ணமே மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

**வசனம் 11. மனிதனின் ஆவி** என்றெழுதும் போது, பவுல், திட்டமாக, மனிதனையும், அவனது மனதையும், அவனது தனிப்பட்ட எண்ணங்களையுமே குறிப்பிட்டார். ஒருவரது நோக்கத்தையும், விருப்பங்களையும் அவர் அறிந்துகொள்வதைப் போல, மற்றொருவரும் அறிந்து கொள்ள முடியாது. அந்த மனிதனும் அந்த மனிதனின் ஆவியும் ஒன்றுதான்.

> பவுல், ஒரு மனிதனின் சரீரமென்பது அவனது விருப்பம், தொழில், சுயம் இவற்றிலிருந்து பிரிக்க முடியாதது என்கிறார். சரீரம் என்பது அந்த மனிதன் எவ்வாறு உள்ளானோ அது, ஒரு மனிதன் வாழ்வது, பின் மரிப்பதற்கான நோக்கத்தையும் வெளிப் படுத்துகிறது அல்லது மற்றவனுக்கு ஒருவன் மரிப்பதையும் வாழ்வதையும் நன்கு வெளிப்படுத்துகிறது (ரோமர் 14:7-9).[5]

ஒரு தனிமனிதனின் சரீரமும் ஆவியும் ஒன்றாக இணைந்திருப்பது, எவ்வாறு தேவ ஆவி தேவனை அவருள்ளவாறே வெளிப்படுத்துகிறது என்பதை, ஒரு கிறிஸ்தவன் புரிந்து கொள்ள உதவுகிறது. விரிவான திரித்துவ மதக் கோட்பாட்டை, உருவாக்காமல், அந்த அப்போஸ்தலர், பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு தேவனின் பிரசன்னத்தில்

பங்கேற்கிறார் என்பதைக் குறித்துக் காட்டினார். **தேவனின் ஆவிதான் தேவனின் சிந்தையை** அறிய முடியும். மேலும் தேவனின் ஆவி, விசுவாசிகளிடம் கிரியை செய்து, தேவ அழைப்பிற்கு இணங்குபவர்களுக்கு அவர் அளிக்கும் ஆசீர்வாதங்களை அவர்கள் புரிந்து கொள்ள உதவுகிறது, ஒரு கிறிஸ்தவன், ஆவியானவரால் *தேவ ஞானத்தை நெருங்க வாய்ப்புக் கிடைக்கிறது*. இப்பிரபஞ்சத்தின் ஞானம், "அழிந்து போகிறது" (1 கொரி. 2:6), ஆனால் தேவனின் ஞானம் மகிமையை வெளிப்படுத்துகிறது. "தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினார்" (2:9).

**வசனம் 12.** கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்கு பவுல் அளித்த ஞானமானது, **தேவனிடத்திலிருந்து வந்த ஆவியை**, தங்களுக்குள் பகிர்ந்து கொண்டதின் விளைவால் வந்தது. தேவனிடத்திலிருந்து வரும் வெளிப்பாடு, **உலக ஆவியின்** உந்துதலால் வரும் ஞானத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. "உலக ஞானம்" சுய உணர்வோடுள்ளதல்ல; தனக்கே திருப்தியளித்தல், அதிகாரத்தைத் தரும் மனிதனின் ஒரு மனக் கண் தோற்றம். மனுக்குலம், தனது திறமையால் தீவிரமடைந்து, வானத்தை அளாவும் கோபுரங்களைக் கட்டும் (ஆதி. 11:4) இலக்கில் மூழ்கினார்கள். தங்களையே ஞானிகள் என்று கூறிக்கொண்டு, "உலகத்தின் ஆவியால்" சிறைபிடிக்கப்பட்டு, தங்களையே பைத்தியக்காரர் ஆக்கினார் (ரோமர் 1:22).

"உலகத்தின் ஆவியைப் போலன்றி," தேவனிடத்திலிருந்து வந்த ஆவி, ஒரு தன்னிறைவுள்ளவர், அவர் மனிதக் காலத்திற்குள் புகுந்து மெய்யான தேவனை வெளிப்படுத்துகிறவர். "தேவனிடத்திலிருந்து வந்த ஆவி" நம்முடைய இருதயங்களில் தேவ அன்பை ஊற்றுகிறது (ரோமர் 5:5) அந்த ஆவி, கொரிந்து விலுள்ள விசுவாசிகள் வஞ்சகமான, நாசமாக்கக்கூடிய, ஈர்க்கக் கூடிய குரல்களை அடையாளம் காணவும், அதனால் **தேவனால்** இலவசமாக வழங்கப் பட்டவைகளை **அறிந்து கொள்ளவும்** முடிந்தது.

பவுலின் பணி, திரும்ப அவர்களை உற்சாகப்படுத்துவதாக இருந்தது. சிலுவைப்பற்றிய செய்தி, உலக ஞானத்தின் அலங்காரங்களைப் பெற்றிருக்காது; ஆனால் அந்தக் காரணத்திற்காக தள்ளிவிட முடியாது. "தேவனிடத்திலிருந்து வந்த ஆவி," தேவன் தமது ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணிய இலவச வரங்களை, கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகள் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது. ஆனால் "உலகத்தின் ஆவி" எதையும் தர இயலாது.

**வசனம் 13.** அந்த அப்போஸ்தலர், தேவனால் இலவசமாக கொடுக்கப்பட்டவைகளை, கொரிந்தியர்களுக்குத் தெரிவித்தார். வசனம் 13 இவ்வாறு கூறுகிறது **இவைகளை நாங்களும் … பேசுகிறோம்** என்று. அவர் பேசியும் எழுதியும் தெரிவித்த வெளிப்பாடு ஆவியானவர், தன் மூலம் கிரியை செய்ததால், என்று புரிந்து

கொண்டார் (காண்க எபே. 3:3, 4). கொரிந்துவில் அவர் தேவனிடமிருந்து பெற்ற கட்டளைகளையே எழுதினார் (1 கொரி. 14:37). அவர் கொரிந்தியருக்கு விடுத்த கண்டிப்பான எச்சரிக்கை யானது, மனித ஞானத்தால் போதிக்கப்பட்டதல்ல, தேவ ஆவியால் போதிக்கப்பட்டது. ஆவியானவரால் கிடைக்கப்பெற்ற வார்த்தைகள், கொரிந்திய சபையிலுள்ள பிரிவினைகளை (முறிவுகளை) குணப்படுத்தும். அந்த வார்த்தைகள், சபை மக்கள் ஏக மனதும், ஏக சிந்தனையுள்ளவர்களாய் சீர் பொருந்தி இருக்க வைக்கும் (1:10).

**சம்பந்தப்படுத்துதல்** (συγκρίνω, *sunkrinō*) என்ற வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் 2:13யிலும், இரண்டு முறை 2 கொரிந்தியர் 10:12லும் காணப்படுகிறது. அந்த வார்த்தை மூன்று விதமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. *“சம்பந்தப்படுத்துதல், ” “ஒப்பிடுதல்”* மேலும் *“வியாக்கியானம் பண்ணுதல்”*[6] என்பது. 2 கொரிந்தியர் 10:12ல் அந்த பகுதியில் என்ற மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது, ஆனால் அதன் அர்த்தம் 2:13 உள்ளபடி, **ஆவிக்குரிய** செயல் பாட்டின் இரண்டு வகைகளையே மிகவும் பொறுத்துள்ளது. ஒரு வழியில், அந்த பெயர் உரிச்சொல் (πνευματικὰ, *pneumatika*) ஆவிக்குரியவைகள் என்ற பாலினமற்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. மற்றொன்று கிரேக்க மொழியில் கிரியையால் பிறக்கும் பன்மைச் (πνευματικοῖς, *pneumatikois*) சொல்லைக் குறிக்கும். ஒரே வகைதான் பாலினமற்றதிற்கும் ஆண்பாலிற்கும் பயன்படுத்தப்படுகிறது. அது ஆணாகப் புரிந்து கொள்ள வேண்டு மென்றால் அதை “ஆவிக்குரிய ஆண்” என்று குறிப்பிடலாம் அல்லது “ஆவிக்குரிய வார்த்தைகள்” என்று இது பாலினமற்ற வடிவில் வாசிக்க வேண்டுமெனில் ஆவிக்குரிய சிந்தைகள் எனக் குறிக்கலாம். NRSV συγκρίνω (*sunkrinō*) என்பதை வியாக்கியானம் என்று மொழி பெயர்த்து, அந்த பெயர் உரிச்சொல்லை, ஆண் இனமாக, “ஆவிக்குரிய” எடுத்து, அந்த மொழிபெயர்ப்பானது 2:13 இவ்வாறு “... ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு” என்றுள்ளது.[7]

NASBயும் NIVயும், NRSVயிலிருந்து வித்தியாசமான கண்ணோட்டத்தில் காண்கிறது. ஆவிக்குரிய சிந்தைகளை ஆவிக்குரிய வார்த்தைகளோடு சம்பந்தப்படுத்தி (NASB) மேலும் “ஆவிக்குரிய உண்மைகளை விளக்குவது, ஆவி கற்பிக்கும் வார்த்தைகளால்” (NIV) அவைகள் எண்ணத்தில் ஒன்றாக இருந்தாலும், ஆவிக்குரிய வினா எழுப்பும் கிரியைகளைப் புரிந்து கொள்ளும்போது, ஆணினமாகவும் ஆனால் அதை விளக்கும் போது வார்த்தைகளுக்கு பொருத்தப்படுகிறது. பவுலின் போதனைகளுக்கு பழுது ஏற்படாத வகையில், இரண்டு மொழி பெயர்ப்பையும் ஒத்துக் கொள்ளலாம், ஆனால் தனது, வாசகர்கள், தேவனின் வெளிப்படுத்தலை விசுவாசிக்க வேண்டுமென்பதில் அதிக அக்கரை எடுத்துக் கொண்டதால்

ஆவிக்குரியவைகள் என்பதை தனி மனிதர்களுக்குக் குறிப்பிடுவது மேலானது.

## ஜென்ம சுபாவமான மனுஷனும் ஆவிக்குரிய மனுஷனும் (2:14-16)

இயேசு கிறிஸ்துவின் மேல் வஸ்திரத்தை தரித்துக் கொள்வது என்பது ஒரு தேவ ஊழியராக இருப்பதே. விசுவாசத்தை இயேசுவின் மேல் வைப்பதற்கும் அவரை ஆத்மார்த்தமாக நேசிப்பதற்கும், விசுவாசிகள், தாம் தேடிக்கண்டவைகளை, தாங்கள் நேசிக்கும் மற்றவர்களுடன் அதைச் சொல்வது அவசியம். மக்களிட மிருந்து, கருத்து வேறுபாட்டையோ அல்லது அதைவிட மோசமான எதிர்ப்பை சந்திக்கும்போதோ, கிறிஸ்தவர்கள் குழப்பமடை கிறார்கள். அதனால் தான் பவுல் 2:14-16ல் இந்த கேள்வியை எழுப்புகிறார் "ஏன் எல்லோராலும் காணமுடிவதில்லை."

**14ஜென்மசுபாவமுள்ள மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிய வைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.**
**15ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.**
**16கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.**

**வசனம் 14. ஜென்மசுபாவமுள்ள** மனிதன் என்பதை மொழிபெயர்ப்பதில், ஒரு மொழியின் மரபை, இன்னொரு மொழிக்கு எடுத்துச் செல்வதிலுள்ள கடினத்தை சாட்சியிடுகிறது. ψυχικός (*psuchikos*) என்பதற்கு ஆங்கிலத்தில் சரியான வார்த்தை இல்லை. இருந்தாலும் ஜென்மசுபாவமுள்ள மனிதன் என்பதற்கு சரியான அர்த்தத்திற்குள் வார்த்தை உண்டு. ஒரு மேலான தன்மையிலுள்ள ஒருவனுக்கு, இயற்கை மனப்பான்மை கட்டுபாட்டில் உள்ள நபரை பவுல் மனதில் வைத்திருந்தார். ஜென்ம சுபாவமுள்ள மனிதன் உண்டு, உறங்கி, மகிழ்ச்சியைத்தேடி, தனது உரிமைக்காகப் போராடுகிறான், அன்பு, ஒழுக்கம், தனது வாழ்விற்கான காரணம் ஆகியவற்றில் குறைந்த கவனமே வைக் கிறான். இந்த அண்டத்தின் தன்மையும் மனுக்குலத்தின் தன்மையையும் பற்றி அவன் கொண்டுள்ள எண்ணம், அவனது சொந்த கண்ணோட்டத்தின் வழியே உருவானது. அதன் வளர்ந்த நிலையில் அந்த கண்ணோட்டம், ஒரு மொழி மாற்றிய தத்துவமாக உள்ளது. ஜென்ம சுபாவமுள்ள மனிதன், அறியாமையில் வாழலாம், அல்லது சிறந்த தத்துவ மேதையாக இருக்கலாம். அத்தகைய

மனிதர்களுக்கு, தேவனைப் பற்றிய தேவனின் வெளிப்பாடு, வாழ்க்கைக்கு தொடர்பற்றதாக இருக்கும். எனவே அவர்கள் தேவனுடைய வார்த்தையை பைத்தியம் என்று தள்ளி விடுகிறார்கள். மாறாக தேவன், தானே தேடும் மகிழ்ச்சியையும் தன்னலமுள்ள கண்ணோட்டத்தையும் பைத்தியம் என்கிறார் (3:19).

ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கும் ஆவிக்குரிய மனிதனுக்கும் ஒரு சிறு பொதுவான தளமுள்ளது. இருவரும் வெவ்வேறு கோளங்களில் நகருகிறார்கள். முற்றிலும் ஜென்ம சுபாவமுள்ள மனிதன், **தேவ ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்வதில்லை**. சிலுவையைப் பற்றிய செய்திக்கான, அவனது பகைமையையும், ஏற்றுக்கொள்ளாத தன்மைக்கும் அதுவே காரணம். **ஆவிக்குரிய கவனம்**, **அவனுக்கு பைத்தியமாகத் தோன்றுகிறது**, அவனால் அதை புரிந்து கொள்ள முடியாது. தேவனின் வெளிப்பாட்டை மதிப்பிடவும், பாராட்டவும் அவனுக்குப் போதுமான வாய்ப்பு இல்லை, உலக ஞானத்தின் அடிப்படையில் அவன் கிரியை செய்கிறான். தேவனின் ஆவியால் வெளிப்படுத்தப்படுபவை ஆவிக்குரிய வகையில் கணிக்கப்பட வேண்டும்.

பவுல், கொரிந்திய விசுவாசிகளுக்கு உறுதிப்படுத்தியது என்னவென்றால், அவர்கள் ஆவியானவரால் கற்பிக்கப்பட ஒப்புகொடுக்கும் பொழுது, தேவ அறிவில் அவர்கள் பங்கேற்றார்கள் என்பதே. அத்தகை பகுத்தறிவு உள்ளிருந்துதான் புரிந்து கொள்ள முடியும். ஒரு கிறிஸ்தவனால், ஒரு அவிசுவாசிக்கு, முழு நற்பண்பு, நம்பிக்கை, கிறிஸ்துவோடு கூடிய ஐக்கியம் ஆகியவற்றைப் புரிய வைக்க இயலாது. அத்தகைய அறிவு அவரோடு வாழ்வதாலே கிடைக்கும். தேவ ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பு, ஒருவன் தன்னை முழுவதுமாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். (வெளிப்படுத்த வேண்டும்.)

ராபர்ட் H. ஸ்டீபன், இவ்வாறு குறிப்பிடுகிறார், ஒரு அவிசுவாசி, வேதாகம உண்மைகளைப் பற்றிய தெளிவான புரிந்து கொள்ளுதலிருந்தாலும், தனிப்பட்ட முக்கியத்துவத்தை அவர்கள் தேவ சத்தியத்தில் தள்ளிவிடுகிறார்கள்.[8] அவிசுவாசி, வேதாகமப் போதனைகளை பைத்தியம் என்று தள்ளி விடும் பொழுது, தேவன், கிறிஸ்தவனோடு இடைப்பட்ட வரலாற்று சாட்சியை அவன் விசுவாசிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறான். வேதாகம வரலாற்று நிகழ்வுகளின் பதிவுகளை நன்கு அறிந்திருக்கலாம், மேலும் பவுல் வற்புறுத்துவதின் அர்த்தத்தையும் நன்கு புரிந்திருக்கலாம். தான் கேட்பது பைத்தியக்காரத்தன்மை என்று அவன் கருதும் பொழுது, அவனது அறிவு நிலையில், அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக அவன் சுவிசேஷத்தின முக்கியத்துவத்தை, அவனே வெறுக் கிறான்.

இந்த பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வகையான மக்கள், குழப்பமாக உள்ளது. சிலர் தெளிவாக வகைப்படுத்த விரும்புகிறார்கள்: 1. “ஆவிக்குரியவர்கள்” (πνευματικοί, *pneumatikoi*) மறு படியும் பிறந்தவர்கள், ஆவிக்குரியவற்றில் தேர்ச்சி பெற்று, பவுலுக்கு ஒத்தாசையாயிருந்தவர்கள். 2. “மாம்சத்திற்குரியவர்கள்” (σαρκικοί, *sarkikoi*) மறுபடியும் பிறவாதவர்கள் (3:3). 3. “ஜென்ம சுபாவமுள்ளவர்கள்” (ψυχικοί, *psuchikoi*) தேர்ச்சியடையாதவர்கள். ஒரே மாதிரி ஜனங்களை *sarkikoi* என்றும் *psuchikoi* என்றும் பவுல் குறிப்பிடுவதை, ஒருவர் உணரும்பொழுது, இந்த சொற்களின் அர்த்தம் உடைகிறது. அவர் எடுத்துக் கொண்ட ஜனங்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள் (புறஜாதியார்) அல்ல (3:3); கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்கள் பின்னர் குறிப்பிட்ட இரண்டு வகையும் இரண்டு வேறு அம்சங்களில் கவனிக்கும் பொழுது சிறந்த வகையில் ஒரே மக்களாகத்தான் பார்க்க முடிகிறது. இருவகையினரும், மாம்சீக விருப்புகள் உடையவர்கள், உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும் தேவ அழைப்புக்கு ஒத்துவராதவர்கள்.

பவுல், எல்லா உலக கபட ஆடம்பரமும், திரவியமும், தத்துவ ஞானமும், வல்லமையும் தேவனால், முழுவதுமாகத் தள்ளிவிடப்படுகிறது, தேவ ஜனங்களாலும் தள்ளிவிடப்பட வேண்டுமென்கிறார். தேவன் உலகின் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டு தமது பலத்தை வெளிப்படுத்தினார் (1:27).

**வசனம் 15.** பவுல், மக்களை வேறுபடுத்தி, **ஆவிக்**குரியவர்கள் என்றும் மற்றவர்களை ஜென்ம சுபாவமுள்ளவர்கள் (2:14) என்றும் குறிப்பிட்டார். ஆனால் (இந்தப்பகுதியிலாவது), எவ்வாறு ஒருவன் ஒரு வகையிலிருந்து, மற்றொரு வகைக்கு கடந்து செல்கிறான் என்று விவரிக்கவில்லை. இவ்வாறு கடந்து செல்வது சாத்தியமா? ஒருவன், ஒரு வகையைச் சேர்ந்தவனாகவோ அல்லது மற்றொரு வகையைச் சேர்ந்தவனாகவே பிறக்கிறானா? ஒருவன் வாழ்க்கையின் ஒரு பகுதியில் ஜென்ம சுபாவமுள்ளவனாகவும், மற்றொன்றில் ஆவிக்குரியவனாகவும் இருப்பது சாத்தியமா? மக்கள் அதைச் சரியாக தேர்ந்தெடுக்கிறார்களா? அவர்களது தீர்மானங்கள் அவர்கள் ஜென்ம சுபாவமுள்ளவர்களாகவோ அல்லது ஆவிக்குரியவர்களாகவோ இருப்பதில் இடைபடுகிறதா? ஜென்ம சுபாவ வழியைத் தெரிந்து கொண்டவன், மனந்திரும்பி, ஆவிக்குரியவனாக மாற, பவுலின் நிருபங்கள் அறை கூவல் விடும் என்று பவுல் ஐயமின்றி, நம்பினார். கொரிந்து பட்டணத்து சபையி லேயே தங்கி, அவர்களோடு தொடர்ந்து வாக்குவாதத்தாலும், கட்டாயப்படுத்தியும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் - இவைகள் எல்லாம், மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அந்த அப்போஸ்தலர் நம்பியதை சாட்சியிடுகிறது. மதச்சம்பந்தமான கண் ணோட்டத்தில் அவர் இருக்கவில்லை.

ஒருவனும் திரும்ப மாற முடியாத ஜென்ம சுபாவமுள்ளவனுமில்லை, திரும்ப மாற முடியாத ஆவிக்குரியவனுமில்லை. சுவிசேஷத்தின் அவசியத்தை அவர்கள் கேட்பதால், தெரிந்தெடுத்து, மாற்றமடைந்து, வளர்ந்து ஆவிக்குரிய மக்களாக மாறுவார்கள் என்று பவுல் எதிர்பார்த்தார்.

ஒருவன் மனமுவந்து, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் பொழுது, தேவ ஆவியானவர் அவனுள் வாசம்பண்ணி, அவனை பலப்படுத்துகிறார். ஆவியானவர் துணையாக இருப்பதால், ஆவிக்குரிய மனிதன் தேவனுக்கு மரியாதை செய்யும் அம்சங்களை பிரித்தறிந்து, தன்னை முடமாக்கி அழிக்கும் பாவபாரத்திலிருந்து எழுகிறான். “ஆவிக்குரியவனாக” இருப்பவன், **எல்லாவற்றையும் ஆய்ந்து கணிக்கிறான்.** அவன் “எல்லாவற்றையும்” கணிக்கும் பொழுது, நலமானதையும், தேவபாதையையும் தேர்ந்தெடுக்க அவனுக்கு முடிகிறது. ஜென்ம சுபாவமுள்ள மனிதன், தன் வழியைத் தேர்ந்தெடுத்தாலும், விசுவாசத்தையும், சந்தோஷத்தையும் அல்லது விசுவாசிக்குள்ள நம்பிக்கையையும் அவனால் புரிந்து கொள்ள இயலாது. விளைவாக, கிறிஸ்தவன் யாராலும் மதிப்பிடப் படுவதில்லை.

**வசனம் 16.** “எழுதப்பட்டிருக்கிறது” என்ற முன்னுரைப் பதத்தைப் பயன்படுத்தாமல் (2:9க்கு மாறாக) ஏசாயா 40:13ஐ மேற்கோள் காட்டுகிறார். 2:16ல் உள்ள வினாக்கள் அழுத்தமானதாக உள்ளன. **அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்?** அவருக்கு ஆலோசனை சொல்ல தகுதியுள்ளவன் யார் வெளிப்படையாக, கர்த்தரின் சிந்தையை அறிந்தவன் ஒருவனுமில்லை. இத்தகைய கேள்விகளுக்கான பதிலில் எந்த வாக்குவாதத்திற்கும் இடமில்லை. எந்த மனிதனும் தேவ சிந்தையை அறியவும் தேவனுக்கு ஆலோசனையாளராகவும் இருக்க முடியாதோ, அதே போன்று, ஒரு ஜென்ம சுபாவமுள்ள மனிதன், தனது உலக ஞானத்தால் ஆவிக்குரியவனின் உள்ளம், இருதயம், ஆவி ஆகியவற்றைக் காண முடியாது என்று பவுல் உறுதியாக இருந்தார். கர்த்தர் தன்னை வெளிப்படுத்தத் தெரிந்து கொள்வதால், கிறிஸ்தவன், கிறிஸ்துவின் சிந்தையை பகிர்ந்து கொள்கிறான். ஆவிக்குரிய விதத்தில் உணருகிறவன் தேவ சிந்தையை அறிய நெருங்குவதைப் போல, ஜென்ம சுபாவமுள்ள மனிதன், ஆவிக்குரிய விதத்தில் உணருகிறவனின் சிந்தையை அறிய மட்டுமே நெருங்க முடியும்.

ஏசாயாவின் மேற்கோளைத் தொடர்ந்து, **எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை** உண்டாயிருக்கிறது என்று உறுதியாகக் கூறுகிறார். அது ஒரு துணிச்சலானக் கூற்று. நாங்கள் என்று அவர் தன்னிலை பன்மையைக் குறிப்பது, கொரிந்தி யர்களோடு, ஆவிக்குரிய எல்லைக்குள் தன்னையும் இமைத்துக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டதாகக் காட்டுகிறார். கிறிஸ்துவின் சிந்தையைக் கொள்வது,

பாவத்திலிருந்து மனந்திரும்புதல், சிலுவையினடியில் தன்னை நிறுத்துவது, கபடத்தையும் தன்னிறைவாக உணர்வது ஆகியவற்றை கைவிடுதல் என்பதே. தனக்குப் பிடித்த போதனையாளர்களைப் பற்றிய பிரிவினைகளுக்கும், தேவையற்ற வாக்குவாதங்கள் செய்வது, கிறிஸ்துவின் சிந்தையில் இருப்பதே அல்ல. அவர்களை சுகவீனமாக்கும் பிரச்சனைகளிலிருந்து விடுபட, ஆரம்ப கட்டமானது, தங்களது சுய பெருமைகளை விட்டொழிக்க ஆயத்தமும், தேவனின் வழிநடத்துதலை எதிர் நோக்குவதுமே. கிறிஸ்துவின் சிந்தையை, சபையில் ஊடுருவும் நம்பிக்கைகளுக்கும் ஏற்புடையதாக்கவே, இந்த நிருபத்தின் அதிக பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## நடைமுறை பயன்பாடு

### தூதும் தூதனும்

சில கிறிஸ்தவர்கள், தேவனிடமிருந்து பெற்ற தாலந்து களினால், திறமையாக தங்கள் கருத்துக்களை வெளிப் படுத்துகிறார்கள், அவர்கள் சிறந்த பேச்சாளர்கள். சுவிசேஷம், காலத்தைப் பற்றியதும், கூறப்பட்ட செய்தியாகவும் இருப்பதால், போதனையும், வற்புறுத்தலும் கிறிஸ்துவில் தேர்ச்சியடைய அடிப் படையாக இருப்பதால், சபையானது, கிறிஸ்துவின் சத்தியத்தைப் பற்றியும், சிலுவையைப்பற்றியும் தெளிவாகப் பேசுபவர்களையும், கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தபவர்களையும் சார்ந்தே சபை உள்ளது. ஒவ்வொரு காலக்கட்டத்தின், சபைகள் அந்தந்த காலத்தில் போதனையாளர்களாலும், பிரசங்கிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டன. எதிரிடையாக தேவனளித்த பேச்சுத் திறமையைத் தங்கள் சொந்த காரியங்களுக்காகப் பயன்படுத்த முற்படுபவர்களால், சபையானது சபிக்கப்பட்டது.

நன்கு உரையாற்றுபவர்களை ரசிக்க வேண்டியது தான். தனது பேச்சுத்திறமையை வளர்த்து, அதை சத்தியத்தை மேம்படுத்தப் பயன்படுத்துவதாலேயே அந்த மரியாதை அவனுக்குக் கிடைக்கிறது. கிறிஸ்தவர்கள், நன்கு உணர்ந்து, ஆராய்ந்து, கவனித்துக் கேட்பது அவசியம். நயமாக, மகிழ்ச்சியூட்டக்கூடிய பிரசங்கம், சத்தியத்தை உணர்த்த இயலாது. கிறிஸ்துவிற்கு நன்கு ஊழியம் செய்ய, தேவனின் வார்த்தைகளைப் போதிப்பவர்கள், முதலாவது நன்கு கற்றவர்களாக இருக்க வேண்டும். வேதாகமத்தை (அறிந்து) கற்று, வழிகாட்டுதலுக்கு அதைச் சார்ந்துள்ளவர்களாக இருக்க வேண்டும். அறிவைப் பெற்று, வசனங்களை அறிவிக்கத் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. கிறிஸ்தவ போதனையாளர், உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேச வேண்டும். நேர்மைக்கும், ஒப்புக்கொடுத்தலுக்கும், எதுவும் ஈடாகாது.

பாடப்பொருளில் மிக ஆர்வமுள்ள ஆசிரியர்களாலேயே,

மாணவர்களின் மனதில் இடம் பிடித்து உற்சாகப்படுத்துகிறார்கள் என்று கல்வியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு கிறிஸ்தவ போதனையாளர் சுவிசேஷத்தில் ஆர்வமுள்ளவராக இருந்தால் போதாது, தன்னையே அதில் வாழ்வதற்கு ஒப்புக் கொடுத்தவரா கவும் இருக்க வேண்டும். ஒழுக்கமும், அறிவும் ஒருவரிடம் சேர்ந்திருந்து, அதோடு பேச்சுத் திறமையும் இணைந்திருந்தால், பரலோக தேவ ராஜ்ஜியம் ஆசீர்வதிக்கப்படுகிறது. சிறந்த வேதாகம போதனையாளர்கள், சிறந்த பேச்சுத் திறமையை மட்டும் சார்ந்தி ருக்கவில்லை. அவர்கள் தாங்கள் வார்த்தைகளால் மட்டும், கேட்கும் மக்களை உற்சாகப்படுத்தவில்லை, தாங்கள் யார் என்பதைக் கூறியும் உற்சாகப்படுத்தினார்கள். சத்தியத்தைப் பேசுபவர்களையும், ஆச்சரியப்படும் மகிழ்ச்சியூட்டும் நாவன்மை வார்த்தைகளைப் பேசுபவர்களையும் அடையாளம் கண்டு, தெரிந்தெடுத்து, சத்தியத்தை தேர்வு செய்கிறவர்களாலேயே சபை ஆசீர்வதிக்கப்படும்.

திறனாய்வாளர்கள் சந்தேகமின்றி பவுலின் உயர்ந்த கல்வியறிவில் குற்றம் கண்டு பிடித்தார்கள். மற்றவர்கள் பேச்சுத்திறமையிலும், தத்துவ நுணுக்கங்களிலும் அவரை விஞ்சி விட்டார்கள் (2 கொரி. 10:10; 11:6). பவுலுக்கு மக்கள் மீது அக்கறையிருந்தது, ஏனெனில் அவர்களுக்காக அவனது உள்ளம் உருகியது அவர் கிறிஸ்துவுக்குள்ளும் அவரது சிலுவைக்குள்ளும் இழுக்கப்பட்டார். எந்த நிறுத்தமும் இல்லாமல், ஒப்புக் கொடுத்து, மற்றவர்கள் எப்படியிருக்க வேண்டுமென்று இவர் விரும்பினாரோ அவ்வாறு இருந்தார். போதனையாளர்களும், பிரசங்கிகளும் சத்தியத்தை அறிந்து கொண்டு, அவர்கள் ஜீவியத்திற்காக அதைப் பின்பற்றி பின்னர் அவர்களது தோழர்களுக்கு அந்த சத்தியத்தைக் கூறும் பொழுது தற்கால சபையானது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

## ஆவிக்குரியவனாக இருத்தல் (2:15)

“ஆவிக்குரிய” என்ற வார்த்தைதான் கிறிஸ்தவ உரையாடல் களில் அதிகமாகக் கேட்கப்படுகிறது. 1 கொரிந்தியர் 2:15லும் கலாத்தியர் 6:1லும் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களை, பவுல் புகழுகிறார். ஆவிக்குரியவர்களாக இருத்தல், கிறிஸ்தவர்களுக்கு ஒரு தகுதியான இலக்குதான், ஆனால் அந்த வார்த்தை எளிதாக தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆவிக்குரியவர்கள் என்று கருதப்படும் அனைவரும் தெய்வத்தன்மையுள்ளவர்களாக இல்லை.

“ஆவிக்குரியத்தன்மை” என்ற பெயர்ச்சொல்லானது, பிரயோஜனமுள்ளதாக இருந்தாலும் வேதாகமத்தில் காணப் படவில்லை. வேதாகம எழுத்தாளர்கள், ஆவிக்குரியத்தன்மையின் ஒரு காணக்கூடாத குணமாக, தெய்வத்தன்மையோடு வாழ்வதை குறிப்பிடுவதில்லை. “ஆவிக்குரிய” என்ற பெயர் மக்களைக் குறிக்க

அரிதாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு வரம் (ரோமர் 1:11) அல்லது நியாயப்பிரமாணம் (ரோமர் 7:14) ஒரு வேளை ஆவிக்குரிய தாயிருக்கலாம். சில ஆராதனையும் ஆசீர்வாதங்களும் இருக்கின்றன. சத்தியத்தைப்போலவே (ரோமர் 12:1; 15:27) வேதாகமம் ஒரு பொழுதும், ஒரு தனிமனிதனை, தனியாகப் பிரித்து "அவன் ஆவிக்குரியவன்" என்று சொல்வதில்லை, எப்பொழுதாவது, கிறிஸ்தவர்களை கூட்டமாகக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

பவுல், ஒருவரை ஆவிக்குரியவர் என்று தீர்ப்பது, அவரோ அல்லது அவளோ பேசும் போக்கை வைத்து மட்டும் தீர்ப்பு செய்யும் அடிப்படையில் இல்லை. ஆவிக்குரியவனாக இருத்தல் என்பது, ஒருவன் எத்தனை முறை "இயேசு" என்று அழைப்பதோ அல்லது எத்தனை முறை கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்வதைப் பொறுத்தல்ல. ஒரு ஆவிக்குரிய ஆண் அல்லது பெண், விசுவாசிகளின் (கூட்டத்தில்) சமூகத்தில் தான், நம்பிக்கையும், சந்தோஷத்தையும் பெறுகிறார்கள். ஒரு ஐக்கியத்தன்மை, ஆவிக்குரியத் தன்மையை ஊடுருவ வைக்கிறது. ஒரு ஆவிக்குரிய மனிதர், சீர் நிலையிலுள்ளவராக இருக்கிறார். அவர், ஒரு சிறு ஜெப வேளையிலோ, அல்லது நண்பருக்கு ஒருசிறு உதவி செய்வதாலோ, மகிழ்ச்சியடையப் பழகுகிறார். கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம், ஆவிக்குரிய வாழ்விற்கு ஒரு இணைப்பு அல்ல; அதுவே வாழ்க்கையின் மையப்பொருள். ஜெபிப்பது, சுவாசிப்பதைப் போல் இயல்பானது. ஒரு ரசிகன், தனக்கு விருப்பமான விளையாட்டுக் குழுவைப் பற்றிப் பேசுவதைப் போல, ஒரு ஆவிக்குரிய மனிதன் கிறிஸ்துவைப் பற்றிப் பேசுகிறான். ஆவிக்குரியவனாக இருத்தல் என்பது, கிறிஸ்துவை உள் வாங்குதலும், அவரது வார்த்தையை சார்ந்திருத்தலும், அவரது ஜனங்களை நேசிப்பதும், அவருடைய ஜனங்களோடு சேர்ந்து ஜெபிப்பதும் ஆகும்.

## உள்ளார்ந்த அறிவு (2:15)

பவுல், ஒரு ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கும் ஆவிக்குரிய மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டை உணரும் பொழுது, சில ஆவிக்குரிய சத்தியங்களை, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினூடே மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்று பவுல் ஆலோசிக்கிறார். கிறிஸ்துவின் விசுவாசத்திற்கு வெளியே நிற்பவர்கள், தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடாதவர்கள், அவர் மீது பகைமை கொண்டவர்கள், கிறிஸ்துவால் இரட்சிப் படைந்தவர்கள் அறிந்தவற்றை, புரிந்து கொள்வதில்லை, புரிந்து கொள்ளவும் முடியாது.

சில கிறிஸ்தவ சத்தியங்களை, அவைகளில் பங்கேற்பதால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்பது உண்மையே. விளக்குவதற்காக, ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும், மீன்

எவ்வாறு பிராண வாயுவை நீரிலிருந்து, செவுள்கள் மூலமாக எடுத்துக் கொள்கிறது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டால் அந்த செயல் முறையிலும், செவுள்களின் செல்களைப் பற்றியும், உலகின் சிறந்த வல்லுனராக அவர் மாறலாம். ஒரு வேளை, அந்த மனிதர் மீனாகவே மாற அனுமதிக்கப்பட்டு, பின்னர் மறுபடியும் மனித உருவெடுத்தால், என்ன நடக்கும். பல ஆண்டுகளாக அவர் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து பெறமுடியாதவற்றை, மீனாகவே இருந்த அனுபவத்திலிருந்து அந்த விஞ்ஞானி கற்றுக் கொள்ள முடியும் என, ஒருவர் ஒத்துக்கொள்வார்.

அவ்வாறே, வேதாகம இறைக்கருத்துக்களையும், வரலாற்று நிகழ்வுகளையும் கலந்தாலோசிப்பது - ஆழமானது, விரிவானது, பிரயோஜனமானவையாக இருக்கலாம் கிறிஸ்துவின் விசு வாசத்தைப் பின்பற்றுவதற்கு ஈடாகாது. உள்ளார்ந்த சமாதானம், தாங்கவொண்ணா கஷ்டத்திலும் நம்பிக்கையோடிருத்தல், விசுவாசிகளின் ஐக்கியம், நல்லவற்றை தேர்ந்தெடுப்பதன் மூலம் வரும் திருப்தி, ஆகியவை எல்லாம் தனிநபருக்குள்ளது, வார்த்தைகளால் உரைப்பது கடினம். அவிசுவாசிகளுக்கு, விசுவாசத்தின் ஈர்ப்பை விளக்குவதில், கிறிஸ்தவர்களுக்கு சிரமமாக உள்ளது, ஏனெனில், சில சத்தியங்கள், விசுவாச வட்டத்திற் குள்ளிருந்து, அனுபவத்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

---

குறிப்புகள்

[1]Hans-Ruedi Weber, *The Cross: Tradition and Interpretation*, trans. Elke Jessett (London: SPCK, 1979; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 73. [2]Richard E. Oster, Jr., *1 Corinthians*, The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 81. [3]Sirach 15:14-17; NAB. (This text, also known as "The Wisdom of Ben Sirach" or "Ecclesiasticus," is part of the Apocrypha.) [4]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 56. [5]Paul S. Minear, "Christ and the Congregation: 1 Corinthians 5—6," *Review and Expositor* 80 (Summer 1983): 349. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 953. [7]ESV "ஆவிக்குரியவர்களுக்கு ஆவிக்குரிய சத்தியங்களை விளக்குகிறது." [8]Robert H. Stein, *A Basic Guide to Interpreting the Bible: Playing by the Rules* (Grand Rapids, Mich.: Baker Books, 1994), 66-67.